II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 158 of 2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 02.04.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | S.Giridharan | Age | : | |
| Father's / Husband's Name | : | N.Suriya Sekaran | Village | : | |
| Taluk | : | | District | : | |

முதல் விசாரணை—

என்னுடைய பெயர் கிரிதரண். நான் வழக்கின் 1ம் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 23.01.2020 தேதியிட்ட தாவா சொத்திற்குரிய ஆதிலட்சுமியம்மாள் பெயரில் உள்ள பட்டாவின் (எண்.37) ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.1.

2. 13.05.2019 தேதியிட்ட ஆதிலட்சுமியம்மாள் வாரிசு சான்றிதழின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.2.

3. 23.09.2013 தேதியிட்ட ராஜகாந்தம் என்பவரின் இறப்பு அசல் வா.த.சா.ஆ.3.

4. 12.07.2019 தேதியிட்ட ராஜகாந்தத்தின் வாரிசு சான்றிதழின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.4.

5. 08.03.2023 தேதியிடட சந்தானலட்சுமியின் இறப்பு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் வா.த.சா.ஆ.5.

6. 07.01.2006 தேதியிட்ட சந்தானலட்சுமியின் கணவர் வி.ஆர். வரதராஜின் இறப்பு சான்றிதழின் ஒளிப்பட நகல் வா.த.ச.ஆ.6.

7. 05.08.2021 தேதியிட்ட தாவா சொத்திற்குண்டான 1 முதல் 4 வாதிகள், 1ம் பிரதிவாதிக்கு மற்றும் சந்தானலட்சுமி ஆகியோர் பெயரில் உள்ள பட்டாவின் (எண். 5407) ஆன்லைன் நகல் வா.சா.ஆ.7.

8. 05.08.2021 தேதியிட்ட தாவா சொத்திற்குண்டான 1 முதல் 4 வாதிகள், 1ம் பிரதிவாதிக்கு மற்றும் சந்தானலட்சுமி ஆகியோர் பெயரில் சிட்டாவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8.

9. 05.08.2021 தேதியிட்ட தாவா சொத்திற்குண்டான 1 முதல் 4 வாதிகள், 1ம் பிரதிவாதிக்கு மற்றும் சந்தானலட்சுமி ஆகியோர் பெயரில் உள்ள அடங்களின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9.

10. 20.12.2021 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.10.

11. 29.07.2022 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.11.

12. 01.04.2023 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.12.

13. 18.07.2019 தேதியிட்ட 01.01.1951 முதல் 31.12.1974 காலத்திற்குரிய வில்லங்க சான்றிதழின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.13.

14. 03.03.2023 தேதியிட்ட 01.01.2010 முதல் 02.03.2023 காலத்திற்குரிய வில்லங்க சான்றிதழின் ஆன்லைன் நகல் வா.த.சா.ஆ.14.

15. தாவா சொத்திற்குண்டான Guideline Value online copy வா.த.சா.ஆ.15 எனவே பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன். ( 5, 6 ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல் என்பதால் அதனுடைய நிருபமை மற்றும் தொடர்புடைமை பற்றி இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 63, 65க்குட்பட்டு குறியீடு செய்யபடுகின்றது).

(அறிவார்ந்த 1, 3, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)